**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)

**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**ஜனவரி–பிப்ரவரி 2024**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. கண்ணதாசன் இறுதியாக எழுதிய காவியம் எது?
2. கேடில் விழுச்செல்வம் எது?
3. குகனின் ஊர் பெயர் என்ன?
4. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழை எழுதியவர் யார்?
5. அரிவை என்பது யாரைக் குறிக்கும்?
6. தக்கயாகப்பரணியை இயற்றியவர் யார்?
7. அபிராமி பட்டரின் இயற்பெயர் என்ன?
8. முல்லை கொடிக்கு தேவையானது எவை?
9. அஃறிணை பிரித்து எழுதுக.
10. ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து நீண்டு ஒலிப்பதன் பெயர் என்ன?

**பகுதி –ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. வண்டமிழ் மொழியின் வளர்ச்சியைக் கூறுக
2. கண்ணதாசன் நடத்திய இதழ்கள் யாவை?
3. கற்றவருக்கு எல்லா நாடும் ஊரும் என்னவாகும்?
4. "ஞாயிற்றைக் கையால் மறைக்க முடியாது" என்ற பழமொழியால் கூறப்படுவது யாது?
5. புனிதமானவை என இராமன் எதனை ஏற்றுக் கொண்டான்?
6. திருமால் யார்யாராகப் பிறந்தான் என்று புலவர் கூறுகிறார்?
7. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?
8. எண்ணல் அளவை ஆகு பெயரை விளக்கி, உதாரணம் தருக
9. குற்றியலுகரப் புணர்ச்சி என்றால் என்ன?
10. செய்யுளின் உறுப்புகள் யாவை?

11. வெண்பாவின் இறுதியில் அமையும் வாய்ப்பாடுகள் யாவை?
12. வழு அமைதி என்றால் என்ன?
13. வைகறைக்குரிய நேரம் யாது?
14. மன்னன் பாராட்டும்பொழுது எவற்றைப் பரிசாக அளிப்பான்?
15. ஏழடிப் பட்டம் என்பது யாது?

## பகுதி – இ

**III.** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. நல்லினம் சேர்தலின் நன்மை யாது?
2. ஏகதேச உருவக அணியை உதாரணத்துடன் விளக்குக.
3. திரு. வி. கல்யாண சுந்தரனார் முகமது நபியை எவ்வாறு வாழ்த்தி வணங்குகிறார்?
4. சித்தன்னவாசலில் வரையப்பட்டுள்ள குளத்தின் காட்சியைப் பற்றி விளக்குக.
5. அளபெடையின் வகைகளை விளக்கி உதாரணம் தருக.
6. வினையெச்ச வாய்ப்பாடுகளை உதாரணத்துடன் பட்டியலிடுக.
7. மொழி வாழ்த்து பாடலின் கருத்தைத் தொகுத்து எழுதுக.
8. அல்வழிப் புணர்ச்சியை விளக்கி உதாரணம் தருக.

## பகுதி –ஈ

**IV.** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. விடை வகைகளை விளக்கி உதாரணம் தருக.
2. தொடர்வண்டி என்ற தலைப்பில் உன் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
3. புறத்திணைகள் மொத்தம் எத்தனை? விளக்கம் தருக.

## பகுதி –உ

**V.** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. கல்வி என்ற அதிகாரத்தில் உள்ள குறளின் பொருளை தொகுத்து எழுதுக.
2. சார்பெழுத்தின் வகைகளை எழுதி, விளக்குக

*****